உண்மை சுடும்

"முதல் கோணல் முற்றும் கோணல்"



(கிறிஸ்தவத்தில்
நாம் எதை நாடுகிறோம்?
நம்மை நாமே
தற்பரிசோதனை செய்து
கொள்ளத் தூண்டும் ஒரு நூல்.)

பதிப்பாசிரியர்
சுவி. டாக்டர் எஸ். தாயப்பன்

ஆசிரியர்
சகோ. விஜய்
சிங்கப்பூர்

“என் வார்த்தை அக்கினியைப் போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியை போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்” - (எரேமியா 23:29)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) **இலவசமாக (மத்தேயு 10:8)** உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely **free of cost (Matt 10:8)** forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

உண்மை கூடும்

"முதல் கோணல் முற்றும் கோணல்"

(கிறிஸ்தவத்தில் நாம் எதை நாடுகிறோம்? நம்மை நாமே தற்பரிசோதனை செய்து கொள்ளத் தூண்டும் ஒரு நூல்.)

ஆசிரியர்

சகோ. விஜய்

சிங்கப்பூர்

பதிப்பாசிரியர்

கவி. டாக்டர் எஸ். தாயப்பன்

"என் வார்த்தை அக்கினியைப் போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியை போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்" – (எரேமியா 23:29)

நன்கொடை ரூ. 5/-

முன்னுரை

நாம் வாழும் இந்தக்காலம் சபைச் சரித்திரத்தின் இருண்ட காலம். மார்ட்டின் லூத்தர் போராடிய காலத்தைவிட பல மடங்கு கோரமான இருளுக்குள் சபை உழன்று கொண்டிருக் கிறது. மத்தேயு 24:4, 5இல் கர்த்தர் சொல்லுகிறபடி அநேகர் எழும்பி அநேகரை வஞ்சித்துக் கொண்டிருக்கிறார்கள். திரும்பிய இடமெல்லாம் வேதப்புரட்டு, கள்ள உபதேசம், அந்திக் கிறிஸ்துவின் ஆவி!! சபையைக் கண்டித்து நல்வழிப்படுத்த வேண்டிய தீர்க்கதரிசியின் இருக்கையோ பல நூற்றாண்டு காலங்களாக காலியாக இருக்கிறது. ஐவகை ஊழியம் ஏட்டுச்சுரக்காய் ஆகிப்போனது. சபையின் நாயகனே சபைக்கு வெளியில் நின்று கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறாராம் (வெளி 3:20).

“நான் பேசினது முதற்கொண்டு கதறுகிறேன். கொடுமை யென்றும் பாழ்க்கடிப்பென்றும் சத்தமிட்டுக் கூறுகிறேன். நான் கூறின கர்த்தருடைய வார்த்தை நாள் தோறும் எனக்கு நிந்தையும் பரிகாசமுமாயிற்று.

ஆதலால் நான் அவரைப் பிரஸ்தாபம் பண்ணாமலும் இனி கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன், ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்பு களில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல் என் இருதயத்தில் இருந்தது; அதைச் சகித்து இளைத்துப் போனேன்; எனக்குப் பொறுக்கக் கூடாமற்போயிற்று” (எரேமியா 20:8, 9).

இதுவே எமது அனுதின அனுபவமாகிப்போனது. இதைத்தவிர இப்போதைக்கு ஒன்றும் சொல்வதற்கில்லை. ஏன் சகோதரரே! உம்மிடம் ஆசீர்வதிக்கும் செய்திகள் ஒன்று மில்லையா என்று கேட்டால் நிறைய இருக்கிறது. ஆனால் இன்னும் பத்தடி முன்னே போனால் படுபாதாளம் என்ற நிலையில் கண்களைக் கட்டிக்கொண்டே முன்னோக்கி நடந்து செல்லுகிறவனது காதுகளில் செவிப்பறையைக் கிழிக்கும் படியான அபாயக்குரல் எழுப்புவதை விட்டுவிட்டு யார்

அவனை சங்கீதம்பாடி மகிழ்விக்கத் துணிவர்? வேதாகமம் முழுவதிலும் தேவஜனத்தின் ஆவிக்குரிய நிலை எதுவோ அக்காலத்தில் அதற்கேற்ற செய்தியே தேவனிடத்திலிருந்து வெளிப்பட்டிருக்கிறது. யாரிடம் எதைச் சொல்ல வேண்டுமோ அவர்களிடம் அதை மட்டுமே சொல்ல வேண்டும். **"மனதுக்க முள்ளவனுக்குப் பாட்டுகளைப் பாடுகிறவன், குளிர்காலத்தில் வஸ்திரத்தைக் களைகிறவனைப் போலவும், வெடியுப்பின் மேல் வார்த்த காடியைப் போலவும் இருப்பான்"** - *(நீதி 25:20).*

தேசத்தில் சத்துருவின் கை ஓங்கியிருக்கும்போது அழுது புலம்பும்படி எஸ்தரைப் பிடித்து சாம்பலில் தள்ளிய அதே மொர்தேகாய் (எஸ்தர் *4:13, 14*) கர்த்தருடைய இரட்சிப்பு வெளிப்பட்டவுடன் **"அந்நாட்களில் விருந்துண்டு சந்தோஷங் கொண்டாடவும், ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்பவும், எளியவர்களுக்குத் தானதர்மஞ் செய்யவும் வேண்டுமென்று திட்டம் பண்ணினான்"** - *(எஸ்தர் 9:22)* என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆக ஆசிகளா, எச்சரிப்பா? எது ஊழியக்காரன் வாயிலிருந்து வரவேண்டும் என்பதை ஜனங்களின் ஆவிக்குரிய நிலையே தீர்மானிக்கிறது.

தசமபாகம் கொடுக்கச் சொல்லி உற்சாகமூட்டும் வாடகைப் பிரசங்கிகள் கையில் ஜால்ராவோடு வந்தால் அவர்களுக்கு திருச்சபை வாசல்கள் அகலத்திறக்கும். கையில் எக்காளத்தோடு வரும் ஜாமக்காரனுக்கு கதவுகள் ஓங்கி சாத்தப்படும். எனவே எங்கள் பிரசங்கப் பீடங்களை நாங்களே உருவாக்கிக் கொள்ளுகிறோம். புத்தகங்கள் வாயிலாக, இணையம் வாயிலாக, ஃபேஸ்புக் வாயிலாக, யூ டியூப் வாயிலாக, வலைப்பூக்கள் வாயிலாக இன்னும் எங்கெல்லாம் முடியுமோ, அங்கெல்லாம் எங்கள் பிரசங்கபீடத்தை நாங்களே அமைத்து எச்சரிப்பின் செய்தியை உரக்கக் கூறுகிறோம்.

"கர்த்தர் எரேமியாவை நோக்கி; நீ போய் யூதாவின் ராஜாக்கள் வரத்தும் போக்குமாயிருக்கிற இந்த ஜனங் களின் புத்திரருடைய வாசலிலும் எருசலேமின் எல்லா வாசல்களிலும் நின்று கொண்டு அவர்களுடனே சொல்ல வேண்டிய என்ன வென்றால்..." *(எரே 17:19, 20).*

ஆம், இனி விசுவாசிகள் கூடும் எல்லா வாசல்களிலும் எங்கள் பிரசங்க மேடை இருக்கும். வலையுலகில் (Internet) மாத்திரமல்ல, நிஜவுலகிலும் கூட.

எங்கள் வாஞ்சை எழுப்புதல், எருசலேம், அலங்கத்தை நெகெமியா கட்டி எழுப்பியது போல கிறிஸ்துவின் போதனைகள் என்னும் சுவரை சபையைச் சுற்றி எழுப்பி, உலகத்துக்கும் சபைக்கும் ஒரு வித்தியாசமுண்டாக்காதவரை அந்த எழுப்புதல் சாத்தியமல்ல.

எங்கள் ஊழியத்தால் எரிச்சலடையும் சிலர், "சுவிசேஷம் அறிவிப்பதை விட்டுவிட்டு ஏன் சபை விசுவாசிகளிடம் ஊழியம் செய்கிறீர்கள்? என்று எங்களைக் கேட்ட வண்ணம் உள்ளனர். நாங்களும் சுவிசேஷத்தை அறிவிக்காமல் இல்லை. ஆனால் அது பிரதான கட்டளையின் ஒரு பகுதி மாத்திரமே! சீஷர்களை உருவாக்குவதன் மூலமே பிரதானக்கட்டளை நிறைவடைகிறது.

"நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" - *(மத் 28:19, 20).*

சபையின் பரிசுத்தத்தை கண்ணைப்போல் காப்பதும் புதிய ஆத்துமாக்களைச் சேர்ப்பதும் ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும். இரண்டுமே சமமுக்கியத்துவமுள்ளது. தேவன் எங்களுக்கு கொடுத்த அழைப்பின்படி விசுவாசிகளிடம் அதிக நேரம் செலவிடுகிறோம். சீஷத்துவத்தை கற்றுக்கொண்டு, கற்றுக் கொடுக்கிறோம்.

கிண்டலும், மிரட்டலும் மாறிமாறி வருகின்றன. உற்சாகப் படுத்தி ஜெபிக்கும் சகோதர சகோதரிகளும் கர்த்தர் கிருபை யால் எங்கள் பக்கம் உண்டு. நாங்கள் தீர்க்கதரிசிகளுமல்ல, தீர்க்கதரிசிகளின் புத்திரருமல்ல, பெரிய ஆவிக்குரிய வரம் பெற்ற தேவமனிதருமல்லர். உங்களைப் போன்ற சாதாரண விசுவாசிகளே! நரகத்துக்கும், பரலோகத்துக்கும் மாறி மாறி பயணித்து தரிசனங்கள் என்ற பெயரில் அம்புலிமாமா கதை சொல்லி ஏய்க்கும் கலை கற்றவருமல்லர். எங்களுக்கு நீண்ட

அங்கிகளும் வேண்டாம், சந்தைவெளி வந்தனங்களும் வேண்டாம். உங்களோடு உண்டு, உறங்கி தலைவர்களாக அல்ல சீஷராக, வேலைக்காரராக, உங்களுக்கு புத்தி சொல்லி உங்களிடம் புத்திமதி கேட்டு உங்களோடு இணைந்து கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ள விரும்புகிறோம்.

எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள், மிக முக்கியமாக நாங்கள் ஆவிக்குரிய பெருமைக்குள் வீழ்ந்துவிடாதபடி, பண ஆசையும் மாம்ச இச்சையும் எங்களை பிலேயாம்களாக மாற்றிவிடாதபடி, எதிர்ப்புகளில் சோர்ந்துவிடாதபடி பெலவீனரான எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

எனது ஆங்கில இணையதளம்:

http://spiritualwhip.blogspot.com

எனது Youtube சேனல்:

http://www.youtube.com/spiritualwhip

கிறிஸ்துவின் சரீரமே! சகோதர ஐக்கியமே!! உன்னை மறந்தால் எங்கள் வலதுகை தன் தொழிலை மறப்பதாக!

ஆசிரியர் பற்றி

இந்த நூலின் ஆசிரியராகிய என் பெயர் விஜய். மதுரையில் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். தற்போது பணியின் நிமித்தம் குடும்பத்துடன் சிங்கப்பூர் தேசத்தில் வசித்து வருகிறேன். கர்த்தர் எனக்கு கொடுத்த பொக்கிஷம் என் மனைவி ஹெலன், எங்களுக்கு சாமுவேல், ஏஞ்சலின் என்று இரு செல்வங்கள் உள்ளனர்.

எங்களுக்காக ஜெபித்து வழிநடத்தும் எங்கள் ஆவிக்குரிய தந்தை சகோ. ஜோசப் அன்பழகன் அவர்களுக்காக தேவனை துதிக்கிறேன். கர்த்தருக்கே மகிமையுண்டாகட்டும்!

சகோ. விஜய் (சிங்கப்பூர்)

தொடர்புக்கு: man.of.god25@gmail.com

Facebook: facebook.com/bro.vijay

இணையதளம்: http://vijay76.wordpress.com/

அணிந்துரை

என்னுடைய தீராத தாகம் என்னவென்றால் வஞ்சிக்கப்பட்ட போதகரும், வஞ்சிக்கப்பட்ட சுவிசேஷகரும் கிறிஸ்தவத்தில் விதைத்துள்ள விஷக் களைகளைப் பிடுங்கி எறியும்படி தேவனால் ஏவப்பட்ட இளைஞர்கள் தூய ஆவியானவரிடமிருந்து செய்தியைப் பெற்று அதை எல்லா நவீன ஊடகங்களையும் பயன்படுத்தி மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டுமென்பதுதான்.

நாம் எல்லோரும் தீர்க்கதரிசனம் உரைக்கவேண்டும் என்று பவுல் கொரிந்தியருக்கு எழுதுகிறார். வாலிபர் தரிசனங்களைக் காண்பார்கள் என்பது கடைசி காலத்தைக் குறித்த யோவேலின் முன்னறிவிப்பு. விசுவாசிகளான வாலிபர்கள் ஆவிக்குரிய வட்டாரங்களில் தங்களைச் சுற்றிலும் நடக்கிற சத்தியத்துக்கு விரோதமான காரியங்களைக் கண்டு அவைகளுக்கு எதிராக தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும். ஒரு திருச்சபையில் தேவனுக்காக வைராக்கியங்கொண்ட ஒரே ஒரு இளைஞனோ யுவதியோ இருந்து அவர்கள் ஆவிக்குரிய வஞ்சகங்களுக்கு எதிராக தீர்க்கதரிசனம் உரைக்கும் வீர நெஞ்சம் கொண்டவராக இருந்துவிட்டால் போதும். அந்தச்சபை எழுப்புதலைக் காணப்போவது உறுதி.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள,

சகோ.ஜோப் அன்பழகன் (இந்தியா)

தொடர்புக்கு: propheticschool@gmail.com

இணையதளம்: http://www.gloryofhiscross.org/

Facebook: facebook.com/job.thangasamy

பதிப்பாசிரியர் உரை

2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டு வாரங்கள் நான் ஊழியத்திற்காக சிங்கப்பூர் அழைக்கப்பட்டிருந்தேன். அந்த சமயத்தில் சகோதரர் விஜய் என்பவர் எழுதிய 'உண்மை சுடும்' என்கிற ஒரு புத்தகம் என் கையில் கிடைத்தது. படித்துப் பார்த்தேன். வாவ்! உண்மையிலேயே அது ஒரு வெடிகுண்டுதான். நமது தற்போதைய கிறிஸ்தவ வாழ்க்கை, கிறிஸ்தவ திருச்சபைகளின் நிலை, ஊழியங்களின் தரம் தாழ்ந்த, வேத சத்தியத்திற்கு புறம்பாக சொல்லப்படுகின்ற பல அவல நிலைகளை மிகவும் ஆழமாக; சிறப்பாக, தெளிவோடு, மிக மிகத் தைரியத்தோடு புட்டு புட்டு வைத்திருந்தார். படிக்கும்போது ஒரு நடுக்கம்தான் வருகிறது.

நான் பொதுவாக சபைகளில் ஆசீர்வாதங்களைப் பற்றி பேசமாட்டேன். மாறாக அவைகள் ஏன் நமக்கு கிடைப்பதில்லை? அவைகளைப் பெற்றுக் கொள்ள நாம் என்ன செய்யவேண்டும், எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசங்கிப்பேன். பெரிய பெரிய சபைகளுக்கும் சென்றிருக்கிறேன். மிகச்சிறிய சபைகளுக்கும் சென்றிருக்கிறேன். இதில் கொடுமை என்னவென்றால் மிக அதிகமான சபைகளில் உள்ள அநேகம் கிறிஸ்தவர்கள் வெறும் பெயர் கிறிஸ்தவர்களாக, சண்டே கிறிஸ்தவர்களாக, அனலுமின்றி குளிருமின்றி இருப்பதையே கண்டிருக்கிறேன். ஒரு தடவை கூட முழுமையாக பைபிளை படித்திராதவர்களே ஒவ்வொரு சபையிலும் அதிகம் உள்ளதை காணும்போது சற்று கடுமையாகவே திட்டிவிடுவேன். சபை மக்களை நாம் ஆண்டவர்கள் வருகைக்கு ஆயத்தமாக்குவதும், அவர்கள் மூலமாக இயேசுவை அறியாத புற ஜாதி மக்களை ஆண்டவரிடத்தில் அழைத்து வரவும், அவர்களையும் அவரின் வருகைக்கு ஆயத்தப்படுத்துவதுமே என் பிரதான நோக்கமாக செய்திகளை கொடுப்பேன்.

அப்பேர்ப்பட்ட எனக்கே "உண்மை சுடும்" புத்தகத்தில் உள்ள கருத்துக்கள் என்னை நடுங்க வைத்தன. இக்கருத்துக்கள்

அநேக போதர்களுக்கு பிடிக்காமல் போகலாம். ஆனால் நிச்சயமாக போதகர்களையும், கிறிஸ்தவர்களையும் இப்புத்தக கருத்துக்கள் சிந்திக்க வைக்கும் என்பது மட்டும் நிச்சயம். சகோ. விஜூவின் கருத்துக்கள் சற்று கடுமையாக இருந்தாலும், இது நமக்கு சபைகளுக்கு மிகவும் தேவையான ஒன்று. இந்த நோக்கத்தோடேயே இந்த நூலை நான் பதிப்பாசிரியராக வெளியிடுகிறேன். கர்த்தருடைய வருகைக்கு நாம் அனைவரும் ஆயத்தமாவோம்.

இப்படிக்கு

தேவசித்தம் நிறைவேற்றுபவர்களாக
நாம் அனைவரும் மாற வாஞ்சிக்கும்
உங்கள் அன்பு சகோதரன்

எஸ். நாயப்பன்

இடம்: சென்னை – 73
தேதி: 03.1.2018

பதிப்பாசிரியரின் பிற நூல்கள்

		On Circulation	Rs.
1	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தமிழில்) (கன்னடம், மலையாளம், தெலுங்கு, இந்தி, ஒரிசா)	8,50,000	10/-
2	My Cry & Joyful Life (English)	75,000	10/-
3.	சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்	4,50,000	10/-
4.	பாவத்தின் சம்பளம் நரகம் (தமிழ், கன்னடம், ஆங்கிலம்)	1,60,000	10/-
5.	இயேசு கிறிஸ்து உங்களோடு பேசுகிறார்	50,000	10/-
6.	என் ஊழியக்காரனே!	20,000	10/-
7.	இந்தியாவுக்கு இயேசு தேவை, ஏன்?	40,000	10/-
8.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே!	40,000	10/-
9.	நீங்களே எனக்கு சாட்சிகள்	20,000	10/-
10.	உண்மையான கடவுள் யார்?	25,000	10/-
11.	அற்புத சுகமளிக்கும் வைதீஸ்வரர் இயேசு	20,000	10/-
12.	இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை	7,15,000	10/-
13.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு (பாகம் (1,2)	15,000	10/-
14.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் (பாகம் 1, 2, 3)	20,000	10/-
15.	தானியேலின் தீர்க்கதரிசனம்	3,000	10/-
16.	கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு (தமிழ், கன்னடம்)	10,000	10/-
17.	திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி – கிறிஸ்டோபர்	15,000	10/-
18.	இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு – சுந்தர் ஏகலைவன்	10,000	10/-
19.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 1, 2)	5,000	10/-
20.	இயேசுவின் இரண்டாம் வருகைக்குப் பிறகு நடக்கும் சம்பவங்கள் – சிஸ்டர் மரியா		10/-
21	பரலோகம் செல்ல எளிதான வழி	5,000	10/-
22.	அரிய வேதம் அறிய வேண்டிய வேதம்	10,000	10/-
23.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து (பாகம் 1, 2)	10,000	10/-
24.	விவிலியமும் விஞ்ஞானமும்	10,000	10/-
25.	இந்துக்களின் கேள்வியும் பதிலும் (பாகம் 1, 2)	10,000	
26.	ஜெகோவா விட்னஸின் உபதேசமும் பைபிளின் பதிலும் கேள்வியும் (பாகம் 1, 2, 3)	5,000	10/-
27.	ஜெகோவா சாட்சிக்கு சத்தியத்தை அறிவிப்பதெப்படி (பாகம்1,2)	5,000	10/-
28.	சிலை வணக்கம் சின்னாபின்னப்படுத்தியதே (தமிழ், ஆங்.)	5,000	10/-
29.	கிறிஸ்தவர்களை எதிர்ப்பதின் விளைவு (தமிழ், ஆங்கிலம்)	5,000	10/-
30.	தெய்வீக சுகம் உண்டா? எபி சுந்தர்ராஜ்	10,000	10/-
31	கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – சிஸ்டர் மரியா	10,000	10/-
32.	தமசோமா ஜோதிர்கமய (ஒரு பிராமணரின் சாட்சி)	5,000	10/-
33.	வேதமா? விஞ்ஞானமா? – Rev. பால்ராத்துரை	5,000	10/-
34.	மனிதனே நீ யார்? – Rev. பால்ராத்துரை	5,000	10/-
35.	சீரழிய சினிமா பாருங்கள் – Rev. பால்ராத்துரை	5,000	10/-
36.	தெய்வத்தை தேடுவோம் வாருங்கள் – Rev. பால்ராத்துரை	5,000	10/-

37.	இந்து மதம், இந்திய மதமா? – உறையூர் வளவன்	5,000	10/–
38.	ஆரோக்கிய வாழ்வுக்கு ஒரு தெய்வீக அமைப்பு	5,000	10/–
39.	கிறிஸ்தவர்களின் பொதுவான 100 சந்தேகங்களுக்குப் பதில்	5,000	10/–
40.	கலக்கலான கைப்பிரதிகள் – டாக்டர் உறையூர் வளவன்	5,000	10/–
41.	பரலோகம் செல்ல 500 ஸ்தோத்திர பலிகள் – சிஸ்டர் மரியா	3,000	10/–
42.	என் கண்கள் கண்டவை – டாக்டர் கிளிப்போர் குமார்	3,000	10/–
43.	உங்கள் செவிகள் கேட்க – டாக்டர் கிளிப்போர் குமார்	3,000	10/–
44.	இயேசுவே மெய்யான தேவன் – நசீலா பீவி (தமிழ், ஆங்கிலம்)	3,000	10/–
45.	சவாலை சமாளிப்பது எப்படி? – செலின் சாமுவேல் பால்ராஜ்	3,000	10/–
46.	ஒரேவழிஇயேசுவின்உன்னதப்படைப்புகள்–Rev.ஜேக்கப்மனோகரன்	3,000	10/–
47.	சொர்க்கம் சொந்தமாகும் – டாக்டர் ஆனந்த் ஜோஷி		10/–
48.	ஆழத்தின் ஓசை – லோட்டஸ் செல்வராஜ்		10/–
49.	இராம ஜென்ம பூமி – டாக்டர் உறையூர் வளவன் (தமிழ், ஆங்)	5,000	5/–
50.	மதமாற்றமல்ல, மனமாற்றமே தேவை – ஆர். ஸ்டாலின்	5,000	5/–
51.	மனமாற்றத்தை பெருக்குவது எப்படி – ஆர். ஸ்டாலின்	5,000	5/–
52.	வாழ்க்கையை வளப்படுத்தும் வார்த்தைகள்	5,000	5/–
53.	நாலு வேதங்களின் நாயகர் இயேசு	5,000	5/–
54.	ஓர் அவசர அறைகூவல்	5,000	5/–
55.	கல்வாரிஜெபக்குழுவும்இராணுவசகோதரர்களும்(தமிழ்,கன்னடம்)	5,000	5/–
56.	திரித்துவம் – பாஸ்டர் சாலமோன் ராஜா	5,000	5/–
57.	இஸ்லாமியர்களின் கேள்விகளுக்குப் பதில் – சாலமோன் ராஜா	5,000	5/–
58.	இந்திய ஊழிய உயர்வுக்கு ஒரு புதிய பார்வை	5,000	5/–
59.	ஆனந்த புதுவாழ்வு கண்டேன்	35,000	5/–
60.	திரும்பிப் பார்க்கிறேன் – டாக்டர் புஷ்பராஜ்	3,000	5/–
61.	ஒரு சரஸ்வதியின் கதை – டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/–
62.	திருமறை தரிசனங்கள் – டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/–
63.	திருமறை துணுக்குகள் – டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/–
64.	கள்ள உபதேசம் உருவாகக் காரணம் – திருப்பூர் சாலமோன்	3,000	5/–
65.	இந்தியாவில் சாதனை படைத்த யூதர்கள்	3,000	5/–
66.	இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சனைகள்	3,000	5/–
67.	இஸ்ரேல் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட தேசம்	3,000	5/–
68.	பாவம் பலவிதம் – Rev. ராபர்ட் டேனியல்	3,000	5/–
69.	யெகோவா தேவன் – Rev. ராபர்ட் டேனியல்	3,000	5/–
70.	இப்படி செய்தால் நீங்கள் பாக்கியவான்கள் – Rev.ராபர்ட் டேனியல்	3,000	5/–
71.	666 பயோசிப் எச்சரிக்கை! – சிஸ்டர் மரியா	6,000	5/–
72.	இல்லவே இல்லாத இந்து மதம் – பீட்டர் அலெக்சாண்டர்	3,000	5/–
73.	கர்வாப்சி – பீட்டர் அலெக்சாண்டர் (தமிழ், ஆங்கிலம்)	3,000	5/–
74.	மந்தை பெருக மகத்தான மாற்றங்கள்	5,000	5/–
75.	உயிர் கொடுத்து உயர்த்தும் உன்னத தேவன்		5/–
76.	மதமாற்ற தடைச்சட்டம் – பீட்டர் அலெக்சாண்டர்		5/–

77.	சிலுவையில் சிந்திய 7 சிவப்பு முத்துக்கள் – உறையூர் வளவன்		5/-
78.	வேத இரகசியங்கள்		5/-
79.	சொர்க்கமும் நரகமும் உங்கள் கையில் (வாலிபர்களுக்கு)		5/-
80.	இதுவே பயணம்		5/-
81.	நான் ஏன் இயேசுவை ஏற்றுக் கொண்டேன்? – ஏ.சி. சேகரன்		5/-
82.	I am a Witness of Lord Jesus Christ - Mohd Ajhas		5/-
83.	மந்திர உலகில் வாலிபர்கள் – வின்சென்ட் செல்வகுமார்		5/-
84.	[illegible]		5/-
85.	கப்பல் கவிழ்ந்த கதை – சகோ. விஜய்		5/-
86.	இரண்டும் ஒன்று – சகோ. விஜய்		5/-
87.	முதல் கோணல் முற்றும் கோணல் – சகோ. விஜய்		5/-
88.	இது உங்கள் உயிர் காக்கும் முயற்சி – சாந்திநேசி	10,000	2.50
89.	மோட்ச வாழ்வுக்கு வழி என்ன – சாந்திநேசி	5,000	2.50
90.	இன்றைய பெற்றோரின் பாவம் நாளை பிள்ளைகளுக்குச் சாபம் – செல்வின் சாமுவேல்	3,000	2.50
91.	திருமறையும் ஞானிகளும் – டாக்டர் உறையூர் வளவன்	3,000	2.50
92.	எப்படி ஜெயிக்கலாம்? – டாக்டர் கிளிஃபோர்டு குமார்	3,000	2.50
93.	ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியும் அபிஷேகமும் – Rev. ஜான் டேனியல்	3,000	2.50
94.	உன் தேவனை சந்திக்க நீ ஆயத்தமா? – ஆர். ஸ்டான்லி (தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம்)		2.50
95.	ஸ்ரீராமஜெயம்		2.50
96.	மரணத்தை வென்ற சாட்சிகள் – பால்ராஜ்துரை		2.50
97.	இந்துமத சித்தாந்தங்களும் திருமறையும் – உறையூர் வளவன்		2.50
98.	மனித நேயம் காக்கும் கிறிஸ்தவம் – உறையூர் வளவன்		2.50
99.	ஈடு இணையில்லாத ஈவு (தமிழ், ஆங்கிலம்)		2.50
100.	இயேசு இறைவனா? – ஆர். ஸ்டான்லி		2.50
101.	இரண்டு கேள்விகள் – டாக்டர் சாம் ஏசுதாஸ்		2.50
102.	மாட்டுக்கறி தடை – உறையூர் வளவன்		2.50
103.	DVD ஆனந்த புதுவாழ்வு (Telefilm)		100
104.	DVD அபாயமணி (Telefilm)		100
105.	VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (தமிழ், கன்னடம், இந்தி, மலையாளம்)	8,75,000	10/-
106.	VCD எழுந்து கட்டுவோம் (தமிழ்)	20,000	10/-
107.	VCD முக்திக்கு வழி கிறிஸ்தவமே (தமிழ்)	15,000	10/-
108.	VCD கதாகாலட்சேபம் (தமிழ்)	20,000	10/-
109.	VCD தேசம் சந்திக்கப்படணுமே கர்த்தாவே (தமிழ்)	10,000	10/-

110. CLARIFIED
111. MAGNIFIED
112. TRINITY
113. POLYGAMY

— Answers to 25 Intriguing Questions of Bible By Rev. Micheal Pedrin, Ph.D. (Each Rs. 10/-)

114.	இயேசு வருகைக்கு முன்பு நடக்கும் சம்பவங்கள் – சிஸ்டர் மரியா	3,000	10/-

இந்த நூல் மற்றும் விசிடி கிடைக்கும் முகவரி

எஸ். தாயப்பன்

12, ஜி.டி. நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ, – 1,
சேலையூர் பேபாஸ்ட், சென்னை – 600 073.
தொலைபேசி: 044–22234526. மின்னஞ்சல்: sakthiprabha@yahoo.com

நூலை அனுப்ப சில விதிகள்:

ஒவ்வொரு நூலுக்கும், விசிடிக்கும் நன்கொடை ரூ. 10/– + தபால் செலவு ரூ. 1 M.O./D.D. அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை M.O. பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் வெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். உங்கள் தொலைபேசி, செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விசிடி அனுப்ப தபால் செலவு மட்டும்: கொரியரில் பதிவு பார்சலில் அனுப்ப (தமிழ்நாட்டிற்குள்) 1 முதல் 15 விசிடி வரை அனுப்ப ரூ. 50/–, 16 முதல் 25 விசிடி அனுப்ப ரூ. 60/–

100 விசிடிக்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் கே.பி.என். பார்சல் சர்வீஸ் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

வங்கியில் பணம் கட்டி புத்தகம் பெற...

கீழ்க்கண்ட வங்கிக் கணக்கில் பணம் செலுத்தி விட்டு எங்களுக்கு தகவல் அளித்தால், நீங்கள் வேண்டும் புத்தகங்கள் , ஊனு அனுப்பி வைக்கப்படும். வங்கிக் கணக்கு விபரம்:

எஸ். தாயப்பன் (S. THAYAPPAN)
சிட்டி யூனியன் பேங்க், சிட்லபாக்கம், சென்னை – 600 064
A/c No: 295001001980044. IFS Code: CIUB 0000295

பிறகு கண்டிப்பாக தகவல் அளிக்க வேண்டிய தொலைபேசி எண்:
T. கார்த்திகேயன், 8680859894, 044 – 2223 4526, 4355 2899

நேரில் வர...

நேரில் நூல்களை பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் பஸ் ஸ்டாப்பிலிருந்து வேளச்சேரி மார்க்கமாக கிளம்பும் அனைத்து ஆ சீரிஸ் மற்றும் வெள்ளை போர்டு பஸ்களில் ஏறி கேம்ப் ரோடுக்கு அடுத்த பஸ் ஸ்டாப்பான மஹாலட்சுமி நகரில் இறங்கவும். ஷேர் ஆட்டோ என்றால் ரூ. 10 மட்டுமே. இடதுபுறம் உள்ள சிட்லபாக்கம் மெயின் ரோட்டில் தி கிலோ மீட்டர் உள்ளே வரவும். வலதுபுறம் மு.மு. மெடிக்கல் ஷாப்பை அடுத்துள்ள வலது புற ஜி.டி. நாயுடு தெருவில் இடது புறத்தில் இரண்டாவது வீடு.

முதல் கோணல் முற்றும் கோணல்

நமக்காக தம்மைத்தாமே வெறுமையாக்கிய ஆண்டவர் இயேசுவின் நாமத்துக்கு மகிமை உண்டாவதாக!

அது நான் சபையின் இளைஞர் ஊழியத்தில் ஆர்வமாக ஈடுபட்டிருந்த காலம். வாலிபச் சகோதரர்களெல்லாரும் சபையிலேயே கிடையாய் கிடப்போம். நாங்கள் அனைவருமே ஊழியத்துக்கென்று வைராக்கியமாய் ஒப்புக் கொடுத்தவர்கள். இரவில் கூட ஒன்றாக உண்டு, ஆலயத்தின் மொட்டை மாடியில் படுத்து உறங்குவது அவ்வளவு ஆனந்தம்! இனிப்பான நினைவுகள்! அன்பான சகோதரர்கள்! மறக்க முடியாத காலங்கள்! ஒருமுறை நாங்களெல்லாரும் இணைந்து கொரியாவிலிருந்து சென்னைக்கு இசை நிகழ்ச்சி நடத்த வந்த பிரபலமான ஆராதனைக் குழுவினரின் வீடியோவை பார்த்துக் கொண்டிருந்தோம். அந்த ஊழியக்காரரின் அறிமுகம் தமிழ்ப்பட சூப்பர் ஸ்டாரின் அறிமுகம் போலவே இருந்தது. அவர் கருப்பு கோட் அணிந்து விமானத்திலிருந்து இறங்கி கம்பீரமாக நடந்து வருகிறார். அவருக்கு பின்னால் அவரது உடன் ஊழியர்கள் அவரைப் போலவே கருப்பு கோட் அணிந்து அவருக்கு பின்னால் வருகிறார்கள். சுற்றிலும் ஆரவாரிக்கும் கூட்டம், பளிச் பளிச் என்று மின்னும் கேமராக்களின் ஃப்ளாஷ்.

எங்களோடு இணைந்து வீடியோ பார்த்துக் கொண்டிருந்த ஒரு சகோதரன் உணர்ச்சிவசப்பட்டு தன்னையும் மறந்து உரக்கச் சொன்ன ஒரு வாக்கியம்!

"வாவ்! நாம என்னைக்கு பிரதர் இப்படியெல்லாம் ஆகப் போறோம்?"

அன்று அதே மனநிலையில் இருந்த நாங்கள் எல்லோரும் அதை ஏக்கத்துடன் ஆமோதித்தோம். அந்த மனநிலை தவறு என்பது கூட அன்று எனக்கு தெரியவில்லை. காலங்கள் உருண்டு சென்றது. இன்றைய கிறிஸ்தவம் இவ்வளவு அவல நிலையில் இருப்பதற்கு தவறான மனநிலையோடும் எதிர்பார்ப்புகளோடும் ஊழியத்துக்கு வருபவர்களும் ஒரு

காரணம் என்பதை கர்த்தர் கிருபையால் கற்றுக் கொண்டேன். நாம் எதை எதிர்பார்த்து, மனதில் விரும்பி தேவனுடைய பணியில் காலடி எடுத்து வைக்கிறோமோ நமது மனம் அதைத் தொடர்ந்துதான் செல்லுகிறது. நமது பிரசங்கங்களும் நாம் வகுக்கும் திட்டங்களும் அதை மையப்படுத்தியே செயல் படுகின்றன. விளைவாக நாம் விரும்பிய அனைத்தையும் ஒரு வேளை பெற்றுக் கொள்ளக்கூடும். ஆனால் கடைசியில் தேவனுடைய சிங்காசனத்துக்கு முன் நின்று கணக்கொப் புவிக்கும் நாளில் நமக்கு மாபெரும் அதிர்ச்சியும் ஏமாற்றமுமே காத்திருக்கும் என்பதில் எனக்கு துளியும் ஐயமில்லை.

தமிழில் "முதல் கோணல் முற்றும் கோணல்" என்ற பழமொழி உண்டு. நாம் ஆரம்பிக்கும் காரியம் ஒன்று ஆரம்பத்திலேயே தவறாக இருந்தால் அது முழுவதும் தவறாகத்தான் முடியும் என்பதே அதன் அர்த்தம்.

இந்தியாவின் மிகப் பிரபலமான ஊழியக்காரர் ஒருவர் மரித்த பின்பு அவரோடு தொடக்க காலத்தில் ஊழியம் செய்தவரும் பின்பு அவரது ஊழியத்தை இன்றுவரை கடினமாக விமர்ச்சிப்பவருமான மற்றொரு ஊழியர் தனது பத்திரிக்கையில் அந்த பிரபலத்தைப் பற்றி எழுதிய குறிப்பு என்னை ஆழமாக சிந்திக்க வைத்தது.

அந்தப் பிரபல ஊழியர் தனது ஆரம்ப காலங்களில் பில்லி கிரகாம். வில்லியன் மரியன் பிரன்ஹாம் போன்றோரின் ஊழியங்களில் ஆழமாகக் கவரப்பட்டு அவர்களது புகழ் பற்றியும் அவர்களுக்கு கூடும் கூட்டம் பற்றியுமே சிலாகித்து பேசிக்கொண்டிருப்பாராம். அவரது பேச்சு சிந்தனை எல்லாம் புகழ், பெருங்கூட்டம், அற்புத அடையாளங்கள் என்றே இருக்குமாம். இதுவே முதல் கோணல் என்பது. அவரும் தான் விரும்பினதை சீக்கிரமே அடைந்தார். புகழ் ஏணியின் உச்சிக்கு சென்றார். ஆனால் இன்று பல ஊழியர்கள் அவரை பின்பற்றி சோரம் போவதற்கான மோசமான பல முன்மாதிரிகளை இந்திய கிறிஸ்தவத்துக்கு விட்டு சென்றிருக்கிறார்.

இன்று ஊழியத்துக்கு வரும் இளைஞர்கள் எவைகளி லெல்லாம் கவர்ச்சிக்கப்பட்டு தாங்களும் ஊழியத்துக்கு வர விரும்புகிறார்கள் என்று பார்க்கலாம்.

மனிதரால் வரும் மகிமை

"அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷ ரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்" - *(யோவா 12:43).*

இன்று சுவிசேஷகர்களுக்கும், போதகர்களுக்கும் கிறிஸ்தவ வட்டாரத்தில் இருக்கும் செல்வாக்கைப் பார்த்தும், சினிமா நட்சத்திரங்களுக்கு இணையாக போஸ்டரில் போஸ் கொடுப்பதைப் பார்த்தும் அநேகர் வஞ்சிக்கப்படுகிறார்கள். **"IN THE NAME OF JESUS"** என்று கர்ஜித்துக் கொண்டு மேடையில் அங்குமிங்கும் வலம் வருவதையும் அவர் கையை நீட்டியவுடன் பலர் தடதடவென சரிவதையும், "பாஸ்டர்! பாஸ்டர்!" என்று அநேகர் அவர்களை சுற்றிச் சுற்றி வருவதையும் கண்ட இளம் விசுவாசியும் தன்னையும் அவரைப் போல கற்பனை செய்து கொண்டு கனவில் மிதக்கிறான். "ஊழியம் என்றால் இதுதான் போல, நாம் ஊழியம் செய்தால் நமக்கும் இப்படிப்பட்ட புகழும் கனமும் கிடைக்கும்" என்ற ஆசை அவன் மனதை நிரப்புகிறது.

"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதா வானவர் கனம்பண்ணுவார்" *(யோவா 12:26)* என்ற வாக்குத் தத்ததை தவறாகப் புரிந்து கொள்ளுகிறார்கள். அந்த வசனத்தை முழுவதும் படித்துப் பாருங்கள்:

"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்."

ஆம், இயேசு எங்கே இருந்தாரோ அதே நிலையில் தன்னை நிறுத்திக் கொள்ளுகிறவனே சீஷன். சாத்தான் பூமியின் சகல ராஜ்ஜியங்களையும் அவற்றின் மகிமையையும் காண்பித்து

இயேசுவுக்கு ஆசை காட்டியபோது **"அப்போலே போ"** என்று சீறினார் *(மத் 4:8-10)*. சிலர் அவரை ராஜாவாக்க முயன்றபோது உடனடியாக அவர்களை விட்டு விலகினார் *(யோவா 6:15)*. **"நான் மனுஷரால் மகிமையை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை"** *(யோவா 5:41)* என்று முழங்கினார். அவரைப் பின்பற்றுபவனும் அவர் இருந்த இடத்தில் இருப்ப வனுமே பிதாவால் கனப்படுத்தப்படுவான். அவரைப் பின்பற்றாத ஊழியர்கள் அடையும் கனமெல்லாம் சாத்தான் கொடுக்கும் மிக ஆபத்தான கனம் - *(மத் 4:9)*.

சிங்கப்பூரில் ஒரு பாஸ்டர் ஆராதனை வேளையில் தான் சபைக்குள் நடந்துவரும்போது Theme Song போல தனக்கென ஒரு இசையை இசைக்கச் செய்வதாக கேள்விப்பட்டேன். அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. தங்கள் சினிமா மோகத்தை எப்படியெல்லாமோ தீர்த்துக் கொள்ளு கிறார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து ஊழியத்துக்கு வருகிறவர் களும் அவர்களை போலவேதான் இருப்பார்கள்.

ஆராதனை ஊழியம் என்ற பெயரில் பளபளக்கும் ஆடை அணிந்து கொண்டு டிவியில் சிலர் அடிக்கும் கொட்டம் தாங்கமுடியவில்லை. பாடும் திறனிருந்தால் யார் வேண்டு மானாலும் கிறிஸ்தவத்தில் புகழ் பெறலாம் என்ற நிலை இன்று உருவாகி வருகிறது. இன்றைய நாளில் எளிதில் புகழ் தரும் ஊழியம் இதுதான். இதன் விளைவாக இன்று ஒரு நாளில் தமிழ்நாட்டில் இரட்சிக்கப்படும் மக்களின் எண்ணிக்கையை விட வெளியிடப்படும் பாடல் ஆல்பங்களின் எண்ணிக்கை அதிகமாயிருக்குமோ என்று தோன்றும் அளவுக்கு எண்ணி முடியாத *(ஜீவனும் இல்லாத)* ஆல்பங்கள் வெளிவந்து கொண் டிருக்கின்றன. ஆராதனை ஊழியம் என்பது ஊழியங்களிலெல் லாம் மகிமையானது. அதில் புகழுக்கு ஆசைப்பட்டு இறங்குவது என்பது தேவனுடைய பெட்டியில் ஊசா கை வைத்தது போன்றது. ஆகவே எச்சரிக்கை!

பிரியமானவனே! மனிதரால் வரும் மகிமையால் கவர்ச்சிக் கப்பட்டு ஊழியத்துக்குள் நுழைவது முதல் கோணல். முடிவில்

ஏரோது போல **"இது தேவசப்தம்! இது தேவசப்தம்!"** என்று ஆர்ப்பரிக்கும் கூட்டத்தின் சத்தத்தில் மயங்கி தேவகோபாக் கினைக்கு ஆளாவாய் என்பதை மறக்காதே.

"ஏரோது தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்து இறந்தான்" - *(அப் 12:23)* என்று வேதம் கூறுகிறது.

பணமும் வாழ்க்கைத் தரமும்

அந்த ஊழியக்காரர் சொந்தமாக விமானம் வைத்திருக்கிறார் என்பதே சில ஊழியக்காரர்களை பலர் அறிமுகப்படுத்தும் விதமாகும். ஏழ்மையில் ஊழியத்தை துவங்கியவர். இன்று ஐசுவரியத்தின் உச்சியிலிருக்கிறார் என்று பலரால் புகழப்படுபவர்களின் வாழ்க்கையையும் பிரசங்கங்களையும் ஆராய்ந்து பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சுகிறது. "வெறும் பத்து ரூபாயோடு ஊழியத்தைத் துவங்கினேன். ஆனால் இன்று தேவன் இத்தனை கட்டிடங்களையும் வாகனங்களையும் தந்தார்" என்பது தேவனை மகிமைப்படுத்தும் சாட்சியல்ல. மாறாக "பல ஆவிக்குரிய பெலவீனங்களோடுதான் என் ஊழியத்தைத் துவங்கினேன். இன்றோ எனக்குள் கிறிஸ்துவின் சுபாவங்கள் ஏராளம் வளர்ந்திருக்கக் காண்கிறேன், அநேக சீஷரை உருவாக்கியிருக்கிறேன்" என்பதே தேவனை மகிமைப்படுத்தும் சாட்சியாகும்.

பிரியமானவனே! ஊழியர்களின் பகட்டு வாழ்க்கை உன்னை ஊழியஞ் செய்ய கவர்ச்சிக்குமானால் அது முதல் கோணல். பிரார்த்தனை கோபுரங்களையும், விசுவாசிகளிடம் யாசித்து அதில் கட்டப்பட்ட கல்லூரிகளையும், சொகுசுக் கார்களையும், கலர்க் கலர் கோட்டு சூட்டுகளையும், ஐந்து நட்சத்திர வாழ்க்கை தரத்தையும், வெளிநாட்டு பயணங்களையும், போஸ்டர்களையும் பார்த்து அதேபோல நமக்கும் கிடைக்குமென்று இச்சித்து ஊழியத்துக்குள் நுழைபவர்களுக்கு ஐயோ! இது பிலேயாமின் ஆவி! கேயாசியின் ஆவி! இறையரசு அல்ல, என்றைக்கும் உள்ள காரிருளே உனக்கு வைக்கப்பட்டிருக்கிறது - (2 பேதுரு 2:17).

கூடும் கூட்டங்கள்

ஒரு ஊழியரின் வெற்றி அவருக்கு கூடும் கூட்டத்தை வைத்தே கணக்கிடப்படுகிறது. சில இளம் ஊழியர்கள் தங்களது புகைப்படங்களை இலட்சக்கணக்கான மக்கள் ஆராதிப்பது போன்ற படத்துடன் கிராபிக்ஸ் செய்து ஒட்ட வைத்து அதை தானே பார்த்துப் பார்த்து கனவுகண்டு, புளங்காகிதமடைந்து தன்னைத் தானே வஞ்சித்து கொள்ளு கிறார்கள். தேவன் பார்க்கும் பார்வை அதுவல்ல, அவர் மோசேயை புகழ்ந்தது அவன் இலட்சங்களை வழி நடத்தியவன் என்பதற்காக அல்ல, அவன் உண்மையுள்ளவன் என்பதற் காகவே! - (எண் 12:7).

பெருங்கூட்டம் கூட்டி வெற்றி பெற்ற ஊழியங்களெல் லாம் தேவன் அங்கீகரித்த ஊழியங்கள் அல்ல. எரேமியாவின் ஊழியம் மனிதருடைய கணக்கின்படி படுதோல்வியடைந்த ஊழியம். ஏனெனில் **"பாபிலோனின் நுகத்துக்கு உட்படுங்கள்"** என்பதே அவன் 40 ஆண்டுகளாக சொன்ன செய்தி. அவனுக்கு ஒருவனும் செவிகொடுக்கவுமில்லை. ஏற்றுக் கொள்ளவுமில்லை. இகழ்ந்தார்கள். இருளுக்குள் தள்ளினார்கள். காயப்படுத்தி னார்கள். மனுஷர் பார்வையில் அவன் ஊழியம் படுதோல்வி. ஆனால் தேவன் பார்வையில் அவன் ஒரு இணையற்ற தீர்க்க தரிசி.

ஒரு காலத்தில் மெகாபோன்களை வைத்து தெருவில் முழங்கியவர்களும், தெருத்தெருவாகச் சுற்றி கைப்பிரதி கொடுத்தவர்களும் தங்களுக்கென்று ஒரு கூட்டம் கூடியவுடன் இன்று ராஜாக்களைப் போல தங்களை காட்டிக் கொள்ள காரணமென்ன? அவர்கள் தேவராஜ்ஜ்யம் கட்டப்பட பிரயாசப்படவில்லை. தங்களுக்கென்று ஒரு ராஜ்ஜியம் கட்டிக்கொள்ள கடினமாய் உழைத்தார்கள். தியாகமாய் பாடுபட்டார்கள். அது அமைந்தவுடன் இதோ! இன்று அநாயசமாக உட்கார்ந்து விட்டார்கள். நாம் தியாகங்களை கண்டு வாயைப் பிளக்கிறோம். தேவனோ இருதயத்தின் ஆழங் களை ஆராய்ந்து அறிகிறார்.

பிரியமானவனே! சென்னை சேரணி அரங்கில் கூட்டம் நடத்த வேண்டும் என்ற கனவோடு கலப்பையில் கைவைப்பா யானால் அது முதல் கோணல். பத்து லட்சம் பேரோ, வெறும் பத்துப் பேரோ தேவன் கொடுத்த மந்தையில் திருப்தியடைந்து அதை உண்மையாய் விசாரிப்பதே உத்தம ஊழியம்.

அற்புத அடையாளங்கள்

இன்று ஊழியத்தில் காலடி எடுக்கும் வைக்கும் பலர் 40 நாட்கள் உபவாசம் போட்டு ஆண்டவரிடம் எதைக் கேட்கிறார்கள்? கனிகளையோ? கிறிஸ்துவின் சுபாவத்தையா? வரங்களைத்தானே? பெயர் சொல்லி அழைக்கும் வரத்துக் காகவே 40 நாள் உபவாசம் போட்ட ஊழியர்களையெல்லாம் எனக்கு தெரியும். போஸ்டரில் பெயருக்கு பின்னால் “வரம் பெற்ற தேவஊழியர்” என்று போட்டு கொள்ளலாமல்லவா!

அற்புத அடையாளங்கள் ஊழியத்தில் வரங்கள் அவசியம் தான். அதில் மாற்று கருத்து இல்லை. ஆனால் அது இருந்தால் தான் ஊழியமே செய்யமுடியும் என்ற மனநிலைதான் தவறு. பெயர் சொல்லி அழைத்து அற்புதங்கள் நடத்தும் ஊழியர் களுக்கு கூட்டம் வருகிறது. அவர்கள் ஹீரோக்களாக பார்க்கப் படுகிறார்கள். பல நாடுகளுக்கும் சுற்றுகிறார்கள் என்பதால் பலரது குறி வரங்களை பெற்றுக் கொள்வதிலேயே இருக்கிறது.

மாபெரும் தீர்க்கனான யோவான் ஸ்நானகன் ஒரு அற்புதமும் செய்யவில்லை. பல உண்மையான தேவதாசர் களும் அற்புதங்கள் செய்தாலும் தம்பட்டம் அடித்துக் கொள் வதில்லை. பிரியமான இளம் ஊழியனே! நீ பணிவிடைக்கார னாக ஆக விரும்பாமல் வரத்தின் பின்னால் சென்று Celebrity ஆக விரும்புவாயானால் அது முதல் கோணல். இதோ! அதே பாதையில் உனக்கு முன்பாகச் சென்று படு பாதாளத்தில் விழுந்த அநேகர் இருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்!

மீடியா புகழ்

இன்று டி.வி.யில் ஊழியம் செய்தால்தான் பெரிய ஊழியர் என்ற நிலை வந்துவிட்டது. இன்று பாஸ்டர்மார்களும், சுவிசேஷகர்களும் தொலைக்காட்சிகளை ஆக்கிரமிக்கத் துவங்கிவிட்டார்கள். தேவனுடைய வார்த்தை மீடியாவில்

பரவுவது நல்லதுதானே என்று பார்த்தால் அந்த நிகழ்ச்சிகளில் பிரசங்கத்துக்கு முன் அவர்கள் தங்களுக்குத் தாங்களே செய்துகொள்ளும் அறிமுகம் இருக்கிறதே! சிலருக்கு ஜெபித்து அவர்கள் கீழே விழும் வீடியோக்களையும் திரள் கூட்டத்துக்கு செய்தி கொடுக்கும் வீடியோக்களையும் காட்டி "இவர் இந்த நூற்றாண்டின் இணையற்ற தீர்க்கதரிசி(!), தேவனால் வரம் பெற்றவர்" என்றெல்லாம் அவர்கள் கொடுக்கும் Build up - களிலேயே தெரிந்துவிடும் இவர் எப்படிப்பட்டவரென்று. இயேசுவோ பவுலோ தன்னை இப்படி அறிமுகம் செய்திருப்பார்கள் என்று நினைத்துக் கூட பார்க்கமுடியாது.

டி.வி. ஊழியம் பாவமல்ல. ஆனால் அது தேவன் திறக்கும் வழியாக இருக்க வேண்டும். அப்படி தேவன் வழிதிறப்பது டிவியில் தோன்றி உண்டியல் குலுக்க அல்ல. தீர்க்கதரிசன வார்த்தைகள் மூலம் தேசங்களைக் குலுக்க. அப்படிச் செய்பவர்கள் புகழை அல்ல, எதிர்ப்புகளையே சந்திப்பார்கள். அவர்களுக்கு கிடைத்த டி.வி. வாய்ப்பும் விரைவில் பறிபோகும். அப்படிப்பட்ட ஊழியத்துக்கு நீ தயாரா?

பிரியமானவனே! டிவியில் முகம் தெரிய வேண்டும், பிரபலம் அடைய வேண்டும் என்ற வாஞ்சை உனக்குள் இருக்குமானால் அது முதல் கோணல். தேவன் உனக்கு வைத்திருக்கும் ஊழியம் எதுவோ அதில் அகமகிழ்வதே கர்த்தருக்கும் பிரியமானது.

வெளிநாட்டுப் பயணங்கள்

இன்றைய கிறிஸ்தவ ஊழியர்களிடையே உள்ள இன்னொரு நம்பிக்கை "என்று எனக்கு முதல் வெளிநாட்டு பயண வாய்ப்பு கிடைக்கிறதோ அன்றுதான் தேவனுடைய ஆசியும் அங்கீகாரமும் எனக்கு கிடைக்கத் துவங்கியிருக்கிறது என்பதாகும்." நானும் ஊழியம் செய்தால் கர்த்தர் என்னையும் பல நாடுகளுக்கு கொண்டு செல்வார் என்ற ஆசையே பலரை ஊழியத்துக்கு உந்தித் தள்ளுகிறது." பிரியமானவர்களே! கர்த்தர் என்னை பல நாடுகளுக்கு அழைத்துச் சென்றார், ஆசீர் வதித்தார் என்று இவர்கள் விடும் சரடுகளை நம்பாதிருங்கள். உண்மையிலேயே தரித்திரர் வாழும் சோமாலியாவிக்கோ,

கம்போடியாவுகோ, மியான்மருக்கோ இவர்கள் யாரும் செல்லுவதில்லை. அங்கெல்லாம் விசுவாசிகள் இல்லையா? அவர்களுக்கு உங்கள் ஆசீர்வாதங்களும், ஜெபங்களும், செய்திகளும் தேவையில்லையா? இவர்களை தேவன் அனுப்பவில்லை. பாலாக்குகளை தேடித்தேடி ஓடும் பிலேயாம்கள் இவர்கள், உள்ளூரில் பத்தாயிரம் பேருக்கு குறைவான கூட்டத்தில் பேசமாட்டேன் என்று முரண்டு பிடிப்பார்கள். ஆனால் பிரிட்டனுக்கு போய் வெறும் பத்துப் பேருக்கு பிரசங்கித்து விட்டு வருவார்கள். ஏனென்றால் அங்குள்ளவர்களெல்லாம் காஸ்ட்லி ஆத்துமாக்கள்.

பிரியமானவனே! ஊழியக்காரனனால் விண்ணூர்தியில் ஏறி லண்டன், அமெரிக்கா, சுவிஸ் என்று உலகம் சுற்றலாம் என்று நீ நினைத்தால் அது முதல் கோணல், இயேசு எளியவர்களையும் தரித்திரத்தையும் தேடிப் போகிற தேவன். இதற்காக கர்த்தர் யாரையும் பணக்கார நாடுகளுக்கே அனுப்பமாட்டார் என்று சொல்லவில்லை. அங்கே போய் முகதாட்சணியம் இல்லாமல் தேவனுடைய வார்த்தையை உள்ளது உள்ளபடி பிரசங்கித்துவிட்டு, யாரிடமும் கையேந்தாமல் திரும்பிவருவது என்பது வேறு. அப்படிப்பட்டவர்களையே தேவன் அனுப்புகிறார். ஆனால் நம்முடைய ஊழியக்காரர்களுக்கு வெளிநாடுகளில் உள்ள மரியாதையை அங்கு போய் கேட்டுப்பார்த்தால்தான் விளங்கும்.

வரதட்சணை

தமிழ்நாட்டில் கிறிஸ்தவர்கள் மிகுந்துள்ள சில மாவட்டங்களில் உள்ள கேவலமான நிலைதான் இது. மருத்துவர்களுக்கும் பொறியாளர்களுக்கும் கிடைக்கும் வரதட்சணையை விட பாஸ்டர்களுக்கு கிடைக்கும் வரதட்சணை அதிகம். அதனால் வீட்டுக்கு ஒருவரை பாஸ்டருக்கு படிக்க அனுப்புகிறார்கள். இறையியல் கல்லூரிகளை இந்த மாவட்டங்களை சேர்ந்தோரே ஆக்கிரமித்துள்ளனர். நானும் கூட இறையியல் கல்லூரியில் சேர்ந்தபோது எங்கு பார்த்தாலும் மலையாளம் கலந்த தமிழைக் கேட்டு ஒருவேளை அந்த மாவட்டங்களில் எழுப்புதல் தீ பற்றி எரிகிறதோ என்று விசாரித்தபோது கிடைத்த தகவல் தான் இது. வரதட்சணைக்காகவும் குடும்ப கவுரவத்துக்காகவும்

தன் மகனை ஊழியக்காரனாகும் படி உற்சாகப்படுத்துபவர்கள் தங்கள் தலைமுறைக்கு சாபத்தைத் தாங்களே வருந்தியழைக்கிறார்கள். ரிங்கல் தோபே போன்ற மாசற்ற மாணிக்கங்கள் பெற்றெடுத்த விசுவாசக் குடும்பத்தாரே! தேவனுடைய பீடத்தில் ஊனமானதையும் நசல் கொண்டதையும் படைப்பானேன்??

பிரியமானவனே! நீ பாஸ்டரானால் சந்தையில் நல்ல விலைக்குப் போகலாம் என்ற கணிப்பில் கர்த்தரின் பணிக்கு வருவாயானால் அது முதல் கோணல். ராஜ்ஜியத்தின் பணியை திருமணச் சந்தையில் வைத்து ஏலம் விடும் உனக்கு ஐயோ!

கடைசியாக சகோதரரே! உண்மை ஊழியம் என்ன என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

"ஊழியம் செய்தால் பூமியில் பெருத்த லாபமிருக்கிறது! எல்லாரும் ஊழியத்துக்கு ஓடியாங்கோ!" என்று இயேசு கூவி அழைக்கவில்லை. மாறாக விரும்பி வந்தவர்களையும் "சற்று பொறு!" எனக்கு சீஷனானால் செல்லுஞ்செலவைக் கணக்குப் பார்த்துவிட்டு, தீர்க்கமான முடிவெடுத்துவிட்டு பின்னர் வா!" ஒழுங்காக யோசிக்காமல் கலப்பையில் கைவைத்து விட்டு பின்னால் வருத்தப்படாதே! என்கிறார். லூக்கா 14:25-35ஐ தயவு செய்து ஒரு முறை வாசித்துப் பாருங்கள். 30ஆம் வசனம் சொல்லுகிறபடி ஊழியம் என்பது **"வரவு அல்ல, செலவு"** பற்றியது.

சேவை கொள்வதல்ல, சேவை செய்வதே ஊழியம் - (மத்: 20:26)

பெற்றுக் கொள்வதல்ல, விட்டுக் கொடுப்பதே ஊழியம் - (லூக்கா 14:33)

ஐசுவரியத்தில் பெருகுவதல்ல, தாழ்மையின் சிந்தையில் பெருகுவதே ஊழியம் - (மத் 11:29)

அடிப்பொடிகளை அல்ல, சீஷர்களைச் சம்பாதிப்பதே ஊழியம் - (மத் 28:19)

சத்தியத்தை விற்று சம்போகமாய் வாழ்வதல்ல, சத்தியத்தைச் சொல்லி பலருக்கும் சத்துருவாய் மாறிவிடுவதே ஊழியம் - (கலா 4:16)

தனக்கு ரசிகர்களை சேர்ப்பவன் ஊழியனல்ல எல்லோ ருக்கும் அடிமையாய் மாறுபவனே ஊழியன் - (1 கொரி 9:19)

சுரண்ஸியில் திளைப்பவனல்ல, கர்ப்ப வேதனைப்படு பவனே ஊழியன் - (கலா 4:19)

மாலைகளுக்கு கழுத்தை கொடுப்பவனல்ல, பட்டயத்துக்கு கழுத்தை கொடுப்பவனே ஊழியன் - (ரோமர் 16:4)

பிரபலத்தையல்ல, பிறர் நலத்தை நாடுபவனே ஊழியன் - (எபி 11:24, 25)

பிறர் தோளில் அமர்ந்து பவனி வருபவன் ஊழியன் அல்ல, தன் தோளில் சிலுவை சுமப்பவனே ஊழியன் - (லூக் 14:27)

ஊழியன் என்பவன் விசுவாசிகள் பணத்தில் ஐந்து நட்சத்திர ஓட்டலில் தங்குபவன் அல்ல, அநேகரை நீதிக்குட் படுத்த ஆகாய நட்சத்திரமாகப் பிரகாசிப்பவனே - (தானி 12:3)

ஊழியம் செய்ய விரும்பும் யாரும் தயவு செய்து இன்றைய பிரபல ஊழியக்காரர்களை பார்க்காதிருங்கள். பார்த்தால் அவர்கள் சிக்கிய கண்ணிகளிலேயே நீங்களும் சிக்கிக் கொள்வீர்கள். நீங்கள் யாரையாகிலும் உதாரணமாக காண விரும்பினால் வில்லியம் கேரி, ஜான்வெஸ்லி, ஒயிட்ஃபீல்ட், வில்லியம் பூத், ஹட்சன் டெய்லர், டேவிட் லிவிங்ஸ்டன், சாது சுந்தர்சிங், டி.எல்.மூடி, ஜார்ஜ் முல்லர் போன்ற தேவமனிதர் களின் வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள். இன்றைக்கு நல்ல ஊழியர்களே இல்லை என்று சொல்ல வரவில்லை. இருக்கி றார்கள். ஆனால் அவர்களில் பலர் பிரபலமாக இல்லை.

எல்லாவற்றையும் விட ஆண்டவர் இயேசுவை நோக்கிப் பாருங்கள். அவரிடம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு மகத்தான பாடம் இருக்கிறது.

"அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கினார்" - (பிலி 2:7)

கர்த்தர் தாமே உங்கள் இருதயங்களில் பேசுவாராக! அவருக்கே சதாகாலங்களிலும் மகிமை உண்டாகட்டும்.

நீங்கள் போகும் திருச்சபை பாபிலோனா? எருசலேமா?

பார்வையற்ற கண்களைத் திறக்கும் பரிசுத்தரின் நாமத்துக்கு மகிமை உண்டாகட்டும்! இன்றைய கிறிஸ்தவத்தில் நூற்றுக்கணக்கான சபைப் பிரிவுகள் இருந்தாலும் கர்த்தரின் பார்வையில் இரண்டே இரண்டு பிரிவு மாத்திரமே உண்டு. ஒன்று மெஜாரிட்டி பாபிலோன். மற்றொன்று மைனாரிட்டி எருசலேம். பாபிலோன் திருச்சபை "உலகப்பொருள்" எனும் கடவுளை(!) மையமாகக் கொண்டது. எருசலேம் திருச்சபை "இயேசு கிறிஸ்து" எனும் உண்மைக் கடவுளை மையமாகக் கொண்டது. நான் போகும் சபை இதில் எந்தப் பிரிவு என்ற கேள்வியை என்னிடம் கேட்காதீர்கள்! இக்கட்டுரையின் முடிவில் நீங்களே அதை அறிந்து கொள்வீர்கள்.

ஒரு விசுவாசியின் குடும்பத்துக்கு ஒரு ஊழியக்காரர் ஜெபிக்க வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். பாபிலோனின் ஊழியர் வந்தால் எப்படி ஜெபிப்பார்? எருசலேமின் ஊழியர் வந்தால் எப்படி ஜெபிப்பார் என்பதைக் கற்பனையாக இங்கு வடித்திருக்கிறேன். இருவருமே வசனத்தை வைத்துத் தான் ஜெபிக்கிறார்கள், இருவருமே ஆசீர்வாதத்துக்குத்தான் ஜெபிக்கிறார்கள். ஆனால் இருவர் ஜெபத்துக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமுண்டு.

பாபிலோனை (ஜெப) மேடைக்கு அழைக்கும் முன் ஒரு முக்கியமான காரியத்தை சொல்லிவிட்டு செல்ல விரும்புகிறேன். விசுவாசிகளின் உலகப் பிரகாரமான தேவைகளுக்காக ஜெபிப்பதே தவறு என்று நான் சொல்ல வரவில்லை. கஷ்டத்திலும் நெருக்கத்திலும் உள்ள ஒரு விசுவாசிக்கு அந்தக் கஷ்டங்கள் தீர ஜெபிக்கத்தான் வேண்டும். ஆனால் ஜெபத்தின் ஆரம்பம் முதல் கடைசி வரை பூமிக்குரிய காரியங்களே முன்னிலைப்படுத்தப் படுவதுதான் பிரச்சனையே. கீழே உள்ள எருசலேம் ஊழியரின் ஜெபத்தை கவனித்துப் பாருங்கள். முழுக்க முழுக்க ஆதித் திருச்சபைக்காக அப்போஸ்தலர் ஜெபித்த ஜெபங்களை தொகுத்து எழுதியிருக்கிறேன்.

வாசித்துப் பாருங்கள், இந்த ஜெபத்தைப் படித்தால் உங்கள் தலை சுற்றிவிடும். காரணம் எருசலேம் ஊழியரின் ஜெபத்தைப் போல் உங்கள் வீட்டுக்கு வந்த யாரும் ஜெபித்துக் கேட்டிருக்க மாட்டீர்கள். இதுதான் நமது துர்பாக்கிய நிலை!

சரி! இப்போது பாபிலோன் ஊழியரை முதலில் ஜெபிக்க அழைப்போம்.

பாபிலோன் ஜெபிக்கிறது

பாபிலோன் ஊழியக்காரர் வீட்டுக்கார அம்மாவிடம் ஒரு செம்பு தண்ணீரை வாங்கி அதை இயேசுவின் இரத்தமாக மாறும்படி கட்டளையிட்டு(!) ஜெபித்து காத்து கருப்பு அண்டாதிருக்க வீட்டின் நிலைக்கால்களிலெல்லாம் தெளிக்கிறார் (காட்டப்படும் ஆதாரம் யாத்திராகமம் 12).

கிருபையும் இரக்கமுமுள்ள பிதாவே! மீண்டும் ஒருமுறை ஐயாவின் குடும்பத்தை காணச் செய்த கிருபைக்காக நன்றி! இதோ குடும்பத்தின் ஒவ்வொரு நபரையும் உமது ஆசீர் வதிக்கும் கரங்களில் ஒப்புக் கொடுக்கிறேன் கர்த்தாவே! ஒவ்வொருவரையும் பேர் பேராக ஆசீர்வதியும்.

குடும்பத்தின் தலைவரான ஐயாவை உமது கரங்களில் ஒப்புக் கொடுக்கிறேன். ஊழியக் காரியங்களுக்கு உற்சாகமாய்க் கொடுக்கிற மகன் கர்த்தாவே! இன்னும் அதிகதிகமாய் கொடுக்கும்படி அவருடைய கரங்களை பலப்படுத்தும். ஐயாவுடைய தொழிலை ஆசீர்வதியும்! (உபா 28:8), கையின் பிரயாசங்களை வாய்க்கப் பண்ணும் (சங் 128:2), வியாபாரத்தின் எல்லைகளை விரிவாக்கும் (1 நாளா 4:10). மேலும் புதிய புதிய ஆர்டர்களைத் தாரும் ஸ்வாமி.

சிறிது நேரம் நிசப்தம்... (ஊழியர் தரிசனம் காண்கிறார்).

மகனே! இதோ! கர்த்தர் உங்களுக்கு தொழிலில் உள்ள பிரச்சனைகளை எனக்கு தரிசனத்தில் காட்டுகிறார்! ஆம்! உங்கள் வியாபாரத்துக்கு எதிராக பில்லிசூனியம் வைக்கப் பட்டிருக்கிறது. "பா" என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் பேரையுடைய ஒரு நபர் இதைச் செய்திருக்கிறார். இதனிமித்தம்

உங்கள் கல்லாவின் மீது ஒரு சர்ப்பம் அமர்ந்திருப்பதைக் காண்கிறேன்!

(உரத்த சத்தமாக) இயேசுவின் நாமத்தினாலே போ! பிசாசே! உன்னை கடிந்து, கட்டி, சபித்து, நரகத்திலே தூக்கி எறிகிறேன்!!! (வீட்டார் அனைவரும் நடுங்குகிறார்கள்)

கர்த்தருடைய ஸ்தானாதிபதியாக அந்தகார வல்லமை களை நோக்கி இயேசுவின் நாமத்தில் பேசுகிறேன். இது தசமபாகத்தில் சத்தியத்துக்கு கீழ்ப்படியும் குடும்பம், தசம பாகத்தில் கீழ்ப்படிவதால் சத்துருவாகிய நீ இவர்கள் பொரு ளாதாரத்தில் கைவைக்க முடியாது. இவர்கள் 10 சதவிகிதத்தில் கீழ்ப்படிந்ததால் மீதமுள்ள 90% சதவிகிதமும் என்னுடைய காவலுக்கு கீழ் உள்ளது என கர்த்தர் சொல்லுகிறார்.

ஆ... மேன்! இதோ! சத்துரு அலறி ஓடுகிறதைக் காண்கிறேன்! மகனே! உனக்கு உண்டான கர்த்தருடைய வார்த்தையைக் கேள்! உனக்கு விரோதமாக எந்த ஆயுதமும் வாய்க்காது (ஏசா 54:17). உனக்கு விரோதமான மந்திரவாதமு மில்லை, குறி சொல்லுதலும் இல்லை என்று கர்த்தர் சொல்லு கிறார் (எண் 23:23). கர்த்தரை கனப்படுத்து, அவருடைய ஊழியக்காரரை கனப்படுத்து; உன் பிரச்சினைகளை நான் பார்த்துக் கொள்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆண்டவரே! இவர்கள் சத்துருக்களின் கண்களுக்கு முன்பாக இவர்களுக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி இவர்கள் தலையை எண்ணையால் அபிஷேகியும் (சங் 23:5). இவர்களுக்கு எதிராக எழும்பின சத்துருக்கள் வெட்கப்பட்டுப் போவார்களாக! உம் பிள்ளைகளுடைய களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பி யிருக்கட்டும். ஆலைகளில் திராட்சை ரசம் புரண்டு ஓடட்டும் (நீதி 3:10), இவர்களது அம்பாரம் மீந்திருக்கட்டும் (2 நாளா 31:10).

ஆண்டவரே! அடுத்த வாரம் ஐயாவுடைய கடைக்கு அரசு அதிகாரிகள் பரிசோதனையிட வருவதாக அவர் கூறியதை நீர் அறிந்திருக்கிறீர். சோதோம் பட்டணத்து மக்களை குருட்டாட்டம் பிடிக்கச் செய்தவரே! இயேசுவின் நாமத்தி

வாலே அந்த அதிகாரிகளின் கண்களைக் கட்டி ஜெபிக்கிறேன். (ஆதி 19:11) அவர்களால் எந்தப் பிரச்சினைகளும் உண்டா காதபடி காத்துக் கொள்ளும்.

ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் பதிலளித்தபடியால் கரங்களைத் தட்டி ஆண்டவரை ஸ்தோத்தரிப்போமா!

ஆண்டவரே! அம்மாவுக்காக வருகிறேன். வீட்டு காரியங்களைக் கூட கிடப்பில் போட்டுவிட்டு உம்முடைய ஆலயமே கதியாகக் கிடக்கின்ற மகள் ஆண்டவரே! பலமுறை வீட்டில் கணவனாருக்கும் பிள்ளைகளுக்கும் சமைக்காமல் கூட விட்டுவிட்டு தவறாமல் வந்து ஆலயத்தின் காரியத்தில் ஜாக்கிரதையாய் பங்கு கொண்ட தியாகத்தை அறிந்திருக்கிறீர். உம்முடைய அடியேன் வீட்டுக்கு வரும் பொழுதெல்லாம் நல்ல உணவளித்து உபசரிக்கிற மகள் கர்த்தாவே! இதோ! சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று சொன்னீரே (மத் 10:42)

ஆண்டவரே! அம்மாவுக்கு பக்கத்து வீட்டு பெண்ணுடன் கடந்த வாரம் ஏற்பட்ட பிரச்சனையை அறிவீர். கர்த்தாவே! உனக்கு விரோதமானவர்கள் உன் பட்சத்தில் வருவார்கள் என்று வாக்குத்தத்தம் சொல்லுகிறது. (ஏசா 54:15). அதன்படியே அம்மாவுக்கு விரோதமானவர்கள் அம்மாவின் பட்சத்தில் வலிய வருவார்களாக. உம்முடைய மகளை வெட்கப்பட விடாதேயும் ஆண்டவரே! (சங் 31:17)

ஆண்டவரே! அம்மாவுக்கு கால் எலும்பில் உள்ள பிரச் சனையை அறிந்திருக்கிறீர். ஆண்டவரே அம்மாவின் கால்களில் கிலேயாத்தின் பிசின் தைலமாகிய இயேசுவின் இரத்தம் பூசப்படுவதாக! என் கரங்களின் கிரியைகளைக் குறித்தும் எனக்கு கட்டளையிடுங்கள் என்று சொன்னவரே! (ஏசா 46:13). இதோ! அம்மாவுடைய கால் கூட உம்முடைய கரத்தின் கிரியைதானே சுவாமி! உம்முடைய வார்த்தை யின்படியே உம்முடைய கரத்தின் கிரியை குறித்து உமக்குக் கட்டளையிடுகிறேன்.

உம்முடைய ஜீவன் அம்மாவின் கால்களில் இப்பொழுதே இர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்றங்குவதாக! கால்களும் கரடுகளும் பெலன் கொள்ளட்டும் (அப் 3:7), மான் கால்களைப் போலாக்கும் ஸ்வாமி (சங் 18:33).

இதோ! ஜெபத்தை கேட்டு அம்மாவுக்கு சுகங்கொடுத்த படியால் கரங்களைத் தட்டி ஆண்டவரை ஸ்தோத்தரிப்போமா?

அன்பான பாட்டி அம்மாவுக்காக ஜெபிக்கிறேன் ஆண்டவரே! சுகம் பெலன் நீடிய ஆயுள் தாரும். கண்கள் முன்பு போல தெரியவில்லை. டி.வி கூட பார்க்க முடியவில்லை என்று சொல்லி வருத்தப்பட்டார்கள் ஆண்டவரே!

இதோ!... பர்திமேயுவின் கண்களைத் தொட்ட ஆண்டவர் பாட்டியம்மாவின் கண்களைத் தொட்டு சுகமாக்கும்படியாய் ஜெபிக்கிறேன்.

பிள்ளைகளுக்காக வருகிறோம் கர்த்தாவே! இதோ. கர்ப்பத்தின் கனி கர்த்தரால் வரும் சுதந்திரம் என்று சொன்னீரே! இம்மட்டும் பிள்ளைகளை ஆசீர்வதித்து வந்த கிருபைக்காக உமக்கு ஸ்தோத்திரம். படிப்பில் நல்ல ஞானத்தைத் தாரும், அடுத்தவாரம் நடக்கவிருக்கிற தேர்வுகளுக்காக வருகிறோம். நல்லபடியாக எழுத கிருபைதாரும். பேப்பர் திருத்துகிறவர் களின் கண்களில் தயவைத் தாரும். நல்ல மதிப்பெண்களை வழங்கக் கட்டளையிடும், பிள்ளைகள் மருத்துவராக இஞ்சினியராக வாழ்க்கையில் உயரட்டும் ஆண்டவரே!

ஆண்டவரே! இப்பொழுதும் கூட ஐயாவின் கரங்களில் இருக்கும் காணிக்கையை உம்முடைய கரத்தில் ஒப்புவிக்கிறேன். ஒன்று பத்து முப்பது நூறாகப் பெருகச் செய்து தரவேண்டுமாய் ஜெபிக்கிறேன். அடியேன் மீண்டும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வரும்வரை குடும்பத்தார் அனைவரையும் கண்ணின் மணி போல காத்தருளும்.

இதோ! ஜெபத்தையெல்லாம் கேட்டு கர்த்தர் பதிலளித்து விட்டபடியால் கரங்களைத் தட்டி ஆண்டவரை ஸ்தோத்தரிப் போமா!

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் நல்ல பிதாவே! ஆமென். ஆமென் ஆமென்.

பிரியமானவர்களே! இதை இன்றைய ஊழியர்களை கிண்டல் செய்யும் நோக்கத்தோடு எழுதவில்லை. தேவ மனிதர் கிறிஸ்துவை ஆராதிப்பதை விட்டுவிட்டு தங்கள் வயிற்றை ஆராதிக்கத் துவங்கியதாலேயே மிகுந்த துக்கத்தோடு இவை களை எழுதுகிறேன். ஒருவரைப் பார்த்து ஒருவர் கெட்டுப் போகும் மோசமான வியாதி இன்றைய கிறிஸ்தவத்தில் காணப்படுகிறது.

இவர் இக்குடும்பத்தாருக்காக ஜெபிப்பதாகத் தோன்றி னாலும் இவரது ஜெபம் தன்னைச் சுற்றியே இருப்பதைப் பாருங்கள்! முழுக்க முழுக்க உலக ஆசீர்வாதங்கள்! நித்தியத் தைக் குறித்த அறிவும் இவருக்கு இல்லை, வாஞ்சையும் இல்லை. இப்படிப்பட்டவர்களைக் குறித்து பவுல் எச்சரிக்கிறார்.

"அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு. அவர் களுடைய தேவன் வயிறு. அவர்களுடைய மகிமை அவர் களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கி றார்கள்" - (பிலி 3:18, 19)

..... அடுத்ததாக எருசலேமை ஜெபிக்க அழைக்கலாம்.

எருசலேம் ஜெபிக்கிறது

கிருபையும் இரக்கமுமுள்ள பிதாவே! உம்முடைய நாமம் மகிமைப்படுவதாக, உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக! உமது சித்தம் எங்கள் தனிப்பட்ட வாழ்விலும், குடும்பத்திலும் சபையிலும் செய்யப்படுவதாக! மீண்டும் ஒருமுறை ஐயாவின் குடும்பத்தைக் காணச் செய்த கிருபைக்காக நன்றி!

ஆண்டவரே! இந்தக் குடும்பத்தாரின் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லார்மேலுமுள்ள இவர்கள் அன்பையுங் குறித்து அறிந்திருக்கிறபடியினாலே இவர்களுக்காக உம்மைத் துதிக்கிறோம்.

"ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது; இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல் லுங்கள். சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும். இல்லாதிருந் தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும்" - (லூக்கா 10:5, 6) என்று சொன்னீர். ஆண்டவரே! உம்முடைய வார்த்தைப் படியே இந்த வீட்டின் மேல் சமாதானத்தைக் கூறுகிறோம்!

அப்பா! பிரதானமாக இந்த வீட்டார் உம்மை அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை இவர்களுக்கு தந்தருள வேண்டுமென்று (எபே 1:17) கருத்தாய் உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். மாத்திரமல்ல இவர்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத் தோடும் உம்முடைய சித்தத்தை அறிகிற அறிவினாலும் நிரப்பப்படுவார்களாக! (கொலோ 1:9)

இவர்கள் சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, உம்மை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, உமக்குப் பிரிய முண்டாகவும் கிறிஸ்துவுக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளவும் இவர்களைப் பழக்குவியும் - (கொலோ 1:10)

ஆண்டவரே! நீர் விரும்பும் சந்தோஷமும் சந்தோஷத் தோடு கூடிய பொறுமையும் நீடிய சாந்தமும் இவர்களில் பெருகும்படிக்கு உம்முடைய வல்லமையால் இவர்களை பெலப்படுத்தும் - (கொலோ 1:11)

ஆண்டவரே! இவர்களை நீர் அழைத்த அழைப்பினாலே இவர்களுக்கு உண்டான மகத்தான நம்பிக்கை இன்னதென்றும். பரிசுத்தவான்களிடத்தில் நீர் கொண்டிருக்கும் சுதந்திரத்தின் மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும், கல்லறையில் இருந்த கிறிஸ்துவை உயிரோடு எழுப்பி அவரிடத்தில் காட்டிய உமது வல்லமைப்படியே விசுவாசிக்கும் பிள்ளைகளாகிய இவர் களிடத்தில் நீர் காண்பிக்கும் வல்லமை எப்படிப்பட்ட தென்றும் இவர்கள் அறியும்படி இவர்களுக்கு பிரகாசமான மனக் கண்களை கொடுத்தருளும் - (எபே 1:18, 19)

சோதனைகளை சகிக்கவும், பாவத்தை ஜெயிக்கவும் இவர்களுக்கு பெலன் தாரும். உம்மைத்தவிர வேறு ஒன்றும் இந்தப் பூமியில் இவர்களை கவர்ச்சிக்கக் கூடாதப்பா! விசேஷமாக பிள்ளைகள் பள்ளியிலிருந்து நல்லவைகளை மட்டும் கற்றுக் கொள்ளவும், இவர்கள் உலகத்தால் பாதிக்கப்படாமல் உலகத்தை பாதிக்கிறவர்களாக இவர்களை மாற்றும். படிப்பில் நல்ல ஞானம் தாரும்! கடினமாய் உழைத்துப் படிக்கும் இவர்களது முயற்சியை ஆசீர்வதியும்.

ஐயாவுக்காக வருகிறோம்! குடும்பத்தின் தலைவராக உம்மைப் பிரதிபலிக்கிறவராக இருக்க கிருபைதாரும். குடும்பத்தையும் பிள்ளைகளையும் செவ்வனே நடத்த கிருபை தாரும். தொழிலில் உமக்கு சாட்சியாக இருக்க உதவி செய்யும். சுமத்திரையான நிறைக்கல்லே உமக்குப் பிரியம். கள்ளத் தராசு உமக்கு அருவருப்பு என்று வார்த்தை சொல்லுகிறது. இவரது உண்மையைப் பார்த்து இவரது வாடிக்கையாளர் உம்மை மகிமைப்படுத்த கிருபை தாரும்.

அன்பான ஐயா அவர்களே! வேதத்திலுள்ள ஆசீர்வாதங்கள் எல்லாம் நிபந்தனைக்குட்பட்டவை. நீங்கள் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படியும்போது மாத்திரமே அதில் சொல்லப்பட்ட ஆசீர்வாதங்கள் உங்கள் மேல் தங்கும்.

இதோ. இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறேன். இன்று நான் உங்களுக்கு கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதமும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமல், இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வழியைவிட்டு விலகி, நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றுவீர்களானால் சாபமும் வரும் என்று வேதம் சொல்லுகிறது (உபா 11:26-28). ஆகவே தேவனுடைய வார்த்தைக்கு கருத்தாய் கீழ்ப்படிய கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக!

அன்பான அம்மாவுக்காக ஜெபிக்கிறோம்! புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் என்று வார்த்தை சொல்லு

கிறது (நீதி 14:1). அம்மாவுக்கு வீட்டை ஞானமாய் ஜாக்கிரதையாய் கட்ட கிருபை தாரும். அவர்களது கால் பிரச்சனையை கிருபையாய் சுகமாக்கும்படியாய் ஜெபிக்கிறோம். இவர்களது பக்கத்து வீட்டாரோடு இருக்கும் பிரச்சனையை பகிர்ந்து கொண்டார்கள் ஆண்டவரே! அது நீங்கி சமாதானமுண்டாக கிருபை தாரும்! அம்மா! நீங்கள் உடனடியாக அவர்களோடு வலிய சென்று ஒப்புரவாகுங்கள்! அதுவே சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை! கர்த்தர் உங்களுக்கு பலன் தருவாராக!

பாட்டியம்மா மீது உம்முடைய இரக்கம் இருக்கட்டும். அவர்களது கண்களை சுகமாக்கும். அதே வேளையில் உண்மையான சந்தோஷத்தை உம்மிடத்தில் கண்டுகொள்ள அவர்களுக்கு உதவி செய்யும்.

ஆண்டவரே! சகோதர சிநேகத்தில் எங்களை ஊன்றக் கட்டும். நாங்கள் எங்களுக்குரியவைகளை அல்ல, பிறரது நன்மைகளையே தேட எங்களுக்கு உதவி செய்யும். உமக்கு சாட்சிகளாய் வாழ எங்களுக்கு அருள் புரியும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்!

அன்பானவர்களே! உண்மை ஊழியரின் ஜெபம் எப்படி இருக்கும் என்பதன் மாதிரிதான் இது. இவர் கர்த்தரை எவ்வளவாய் ருசித்திருக்கிறார் என்பது விளங்குகிறது. மனிதரை திருப்திப்படுத்த ஜெபிக்கவில்லை. இது தேவனை, நித்தியத்தை மையமாகக் கொண்ட ஜெபம். இப்படிப்பட்ட ஊழியர்களை கனம் பண்ணுங்கள். அவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்களுக்காக கருத்தாய் ஜெபியுங்கள். இவர்கள் தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறார்கள். இதனாலே இருதயத்திலல்ல, வெளிவேஷத்தில் மேன்மை பாராட்டுகிறவர்களுக்கு எதிரே இப்படிப்பட்ட தகப்பன்மாரை குறித்து நீங்கள் மேன்மை பாராட்டி கர்த்தரை மகிமைப்படுத்துங்கள் (2 கொரி 5:11, 12).

கர்த்தர் உங்கள் கண்களைத் திறப்பாராக! அவருக்கே சதாகாலங்களிலும் மகிமையுண்டாகட்டும்!